(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 36.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஒற்றோபர் 22, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0112 / ' 09

1.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக சுயாதீன தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பாளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்பு நேரம் ஒதுக்கப் பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வள வென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0223 / '09

2.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "மாத்தறை அபிவிருத்தி நிதியம்" எனும் பெயரில் ஒரு நிதியம் கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சில் செயற்படுத்தப்பட்டதா,

(ii) அவ்வாறாயின், அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது,

(iii) இந்நிதியம் செயற்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சராக பதவி வகித்தோர் யாவர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிதியத்துடன் தொடர்புடைய வங்கி மற்றும் வங்கிக் கணக்கு இலக்கம் யாது,

(ii) இந்நிதியத்துக்கு நிதி கிடைத்த மூலங்கள் யாவை,

(iii) இந்நிதியத்துக்குக் கிடைத்த நிதித்தொகை எவ்வளவு,

(iv) இந்நிதியத்தின் நிதி எவ்வாறான விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது,

(v) அதன் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0419 / '09

3.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்லேபொல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென்பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத் தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0513 / '09

4.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான கா /தவலம பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 35 ஆம் காணியில் தற்போது எத்தனை பேர் அனுமதியின்றிக் குடியமர்ந்துள்ளனரென்பதையும்,

(ii) மேற்படி குடியிருப்பாளர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) இவர்கள் எவ்வளவு காலமாக மேற்படி காணியில் குடியமர்ந்துள்ளன ரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கிராமத்திற்கு வீதிவசதிகளும் மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) நீண்ட காலமாக இக் குடியிருப்பாளர்கள் வீடுகளை அமைத்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு, குடியமர்ந்துள்ளதால் எவ்வளவு காலத்திற்குள் இவர்களுக்கு மேற்படி காணிகளுக்கான உறுதிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வாரென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0543 / '09

5.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2009 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் இலங்கையின் பல்வேறுபட்ட பொருளாதாரத் துறைகளில் 192,000 தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இன்றேல், மேற்படி காலப் பகுதியில் இலங்கையின் பல்வேறுபட்ட பொருளாதாரத் துறைகளில் எத்தனை தொழில் வாய்ப்புகள் இழக்கப் பட்டுள்ளன என்பதையும்,

(ii) இவ்வாறு தொழிலை இழந்தோரின் எதிர்கால முன்னேற்றத்தின் பொருட்டு அரசாங்கம் இதுவரை வழங்கியுள்ள சலுகைகள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0549 / '09

6.

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— துணைப்பயிர் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹிங்குரான சீனி நிறுவனம் முதன்முதலாக தனியார்மயப்படுத்தப்பட்டது எப்போது,

(ii) அது எந்த நபருக்கு அல்லது நிறுவனத்துக்கு,

(iii) அதன் மதிப்பீட்டு பெறுமானம் மற்றும் விற்பனை விலை யாது,

(iv) இதனைப் பெற்றவர்கள் உரிய முழுத்தொகையை செலுத்தினார்களா,

(v) இன்றேல், செலுத்தப்பட்ட முழுத்தொகை யாது,

(vi) செலுத்தப்பட்ட தவணைகளின் எண்ணிக்கை மற்றும் எவ்வாறு செலுத்தப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விற்பனையின் போது முழு பணியாட்டொகுதி மற்றும் இவர்கள் நிரந்தர/ அமய / ஒப்பந்த தொழிலாளர்களாக வெவ்வேறாக எவ்வளவு,

(ii) நட்டஈடு வழங்கி அகற்றப்பட்டோர் எண்ணிக்கை மற்றும் ஒருவருக்குக் கிடைத்த ஆகக்குறைந்த மற்றும் உச்ச நட்டஈட்டுத்தொகை மற்றும் அது தீர்மானிக்கப்பட்ட முறைமை யாது,

(iii) நட்டஈடு பெற்றோர் மீண்டும் நிறுவனத்தில் சேர முடியுமாயின் அவர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0710 / ' 09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு , சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இற்றை வரையில் தெரிவு செய்யப்பட்ட / நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதிகளின் எண்ணிக்கையினையும்,

(ii) அவர்கள் ஆட்சி செய்த காலப்பகுதியினையும்,

(iii) முன்னாள் சனாதிபதி ஒவ்வொருவருக்கும் அல்லது அவர்களால் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகையினை வெவ்வேறாகவும் அவற்றிற்கான காரணங்களையும்,

(iv) அவர்களில் எவருக்காவது வீடோ அல்லது காணியோ வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின் அதன் அமைவிடத்தையும், விஸ்தீரணத்தையும்,

(vi) அது வாடகைக்கு வழங்கப்பட்டதா அல்லது சொந்தமாகவே வழங்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தப்பாதுகாப்பு ஆளணியினரின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0114 / '09

8.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அமைச்சின் கீழ் பிராந்திய இலக்கம் 02 இன் கீழ் வருகின்ற கொழும்பு, கம்பஹ, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் சமூக நலன்புரி கருத்திட்டங்களின் பொருட்டு 2006, 2007, 2008, மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்காக தனித்தனியாக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகள் முடிவடைந்திருப்பின் வேலை ஆரம்பிக்கப் பட்ட திகதி, வேலை முடிவடைந்த திகதி, மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் செலுத்தப்பட்டுள்ள முழுத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் பயன்பெறுனர் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0479 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெவிநுவர பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் மாத்தறை-கதிர்காமம் பிரதான வீதியுடன் தொடர்புடைய கபுகமயில் தரிசு நிலமாக உள்ள வயற்காணியின் ஒரு பகுதி நிரப்பப்பட்டு ஹோட்டலொன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கபுகமவில் தரிசு நிலமாக உள்ள வயற்காணியின் ஒரு பகுதியை நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போதென்பதையும்,

(iii) தரிசு நிலமாக உள்ள வயற்காணிகளை நிரப்புவதற்கு அனுமதி வழங்கு தலானது மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்திற்கு இணங்கி யொழுகின்றதாக அமையுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி காணியினதும் ஹோட்டலினதும் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(ii) மேற்படி காணி நிரப்பல் மற்றும் ஹோட்டல் அமைத்தல் சட்ட விரோதமான தாயின் அதற்கெதிராக நடவடிக்கையெடுக்கப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்திற்குள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0629 / ’09

10.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானசேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹரகம, யஹம்பத் மாவத்த, 80/11 ஆம் இலக்க முகவரியில் வதியும் டபிள்யூ. எம். லக்ஷ்மன் என்பவர் 1987.11.02 ஆம் திகதி முதல் திருகோணமலை துறைமுகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராக சேவையில் இணைந்துள்ளார் என்பதையும்,

(ii) 1997.07.28 ஆம் திகதி முதல் இலங்கை துறைமுக அதிகாரசபை இவர் சேவையைவிட்டு விலகியதாகக் கருதி இவருடைய சேவையை இடைநிறுத்தி உள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 1997.07.25 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தேதியில் பாம்பு தீண்டியதன் காரணமாக கடும் சுகயீனத்திற்கு உள்ளாகியதனால் இவர் சிகிச்சை பெற்றுக் கொண்ட ஆயுர்வேத விஷ வைத்தியரிடமிருந்து மருத்துவ சான்றிதழ் ஒன்றை பெற்று அதை சமர்ப்பித்திருந்த போதும் இவர் சேவையை விட்டு விலகியதாக கருதப்படுவதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இவர் சமர்ப்பித்துள்ள மேன்முறையீட்டினை மீண்டும் பரிசீலனைக்குட்படுத்தி இவரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0633 / ’09

11.

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்.

(ii) அந்தந்த பொலிஸ் நிலையங்களுக்குரிய (பயன்படுத்தக்கூடிய) ஜீப் வண்டிகள், டிரக் வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கும் 2009 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களில் எரிபொருள்களுக்காக வழங்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) 2008 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கான மேற்படி தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0634 / '09

12.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குவைட் இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக S-08098 எனும் இலக்கத்தின் கீழ் காலியில் வதியும் திருமதி சந்திரலதா விக்கிரமதிலக்க விண்ணப்பித்துள்ள திகதி யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 0375 ஆம் இலக்க பிரேரணைக்கு பதிலளிக்கும் போது 1994.12.31 ஆம் திகதி வரையிலுள்ள இழப்பீட்டிற்காக பதிவு செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டதென்பதையும்,

(ii) KCTR 21651 இலக்கமுடைய ஆய்வு அறிக்கையிலுள்ள தகவல்களுக்கேற்ப 2003 ஆம் ஆண்டில் இவர் இழப்பீட்டினைப் பெறுவதற்காக விண்ணப் பித்துள்ளாரென்றும் 2003.12.17 ஆம் திகதி மீண்டும் பரிசீலிக்கப் பட்டுள்ளதென கு/வன்/கெ/ச 2000 பற்றுச்சீட்டிற்கு இணங்க தெளிவாகின்ற தென்பதையும்,

அவர் அறிவாரா?

(இ) சம்பந்தப்பட்ட ஆலோசனைக் குழு அறிக்கைக்கேற்ப 2004 ஆம் ஆண்டிற்கு முன்பதாக பதிவுசெய்யப்படவில்லையென எனக்கு அறிவிக்கப்பட்டாலும், மேற்படி தகவல்களுக்கேற்ப 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) திருமதி சந்திரலதா விக்கிரமதிலகவிற்கு செலுத்தப்படவேண்டிய குவைட் இழப்பீட்டுத்தொகையை எவ்வளவு காலத்திற்குள் செலுத்த முடியுமென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0712 / ' 09

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 10 வருடங்களுக்கான,

(i) சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல்லின் அளவையும்,

(ii) உற்பத்திச் செலவையும்,

(iii) அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட சராசரி விலையையும், வருட மற்றும் போக அடிப்படையிலும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த நான்கு வருடங்களுக்கான,

(i) அரசித் தேவை எவ்வளவு என்பதையும்,

(ii) அரிசி இறக்குமதியில் விதிக்கப்பட்ட தீர்வை விலைகளையும்,

(iii) நெற் பயிர்ச்செய்கைக்கான வளமாக்கிகளுக்கான மானியம் மீது செலவு செய்யப்பட்ட தொகையையும்

ஆண்டு மற்றும் மாத வாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடந்த 5 வருடங்களுக்கான மாவட்ட அடிப்படையில் தேவைப்பட்ட வளமாக்கிகளின் மெற்றிக் தொன் அளவையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0465 / '09

14.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் மனைசார் மின்சாரப் பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகத் தொழில்முயற்சிகளுக்காக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்கின்றவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் அநுராதபுரம் மாவட்டத்தில் தனித்தனியாக எத்தனை மனைசார் மின்சாரப் பாவனையாளர்களின் மின்சாரம் துண்டிக்கப்பட்டதென்பதையும்,

(iv) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் அநுராதபுரம் மாவட்டத்தில் தனித்தனியாக எத்தனை கைத்தொழில் மற்றும் வர்த்தகத் தொழில்முயற்சி மின்சாரப் பாவனையாளர்களின் மின்சாரம் துண்டிக்கப்பட்டதென்பதையும் ,

(v) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் மூலமாக மனைசார் மின்சாரப் பாவனையாளர்களிடமிருந்து அபராதத் தொகையாக எவ்வளவு பணம் அறவிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்சாரம் எந்த அடிப்படையில் துண்டிக்கப்படுகின்றதென்பதையும்,

(ii) மின்சாரம் துண்டிக்கப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாவனையாளர்கள் அறிவூட்டப்படுகின்றார்களா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0635 / '09

15.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுதேச மருத்துவத்துறை அமைச்சின் ஆயுர்வேத ஆணையாளர் பதவி உள்ளிட்ட பிரதான நிருவாக பதவிகளுக்கு கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் யாதென்பதை அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பதவிகளுக்கு தற்போது சுதேச மருத்துவத்துறை அமைச்சில் பணியாற்றும் மருத்துவர்களில் எத்தனை பேர் தகைமை பெற்றுள்ளார்கள் என்பதையும்,

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் தற்போது பணியாற்றும் நிறுவனங்கள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) சுதேச மருத்துவ முறையுடன் தொடர்புடைய அறிவினைக் கொண்ட உத்தியோத்தர்களைக் கொண்டு சுதேச மருத்துவதுறை அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்களின் நிருவாகப் பதவிகளை நிரப்புவதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) சுதேச மருத்துவத்துறை அமைச்சின் செயலாளர் பதவி தவிர்ந்த ஏனைய பிரதான பதவிகளை அமைச்சில் பணியாற்றும் தகைமைகளைக் கொண்ட மருத்துவர்களைக் கொண்டு நிரப்புவதற்கு எவ்வளவு காலத்திற்குள் நடவடிக்கையெடுக்கப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1) ,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 12.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2009.10.23 ஆம் திகதி சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 12.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*6.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*12.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 212 ஆம் பிரிவின் கீழ் ஆளொருவர் ஒவ்வொரு காலாண்டுக்கும் செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூன் 19 ஆந் திகதிய 1606/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூன் 30 ஆந் திகதிய 1608/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் சிகரெட், சுருட்டு, பீடி, அல்லது குழாய்கள் புகையிலை பொருட்டான மூலப்பொருள் அல்லது முடிவுற்ற பொருட்களை உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல் இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூலை 17 ஆந் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

மின்வலு, சக்தி அமைச்சர் ,— இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்வலு, சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் 03 ஆந் திகதிய 1617/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் ,— மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (450 ஆம் அத்தியாயமான) 1951 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கும் பொருட்டு 2009.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*29.

தொழில் உறவுகள், மனித வலு அமைச்சர்,— வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே 19 திகதிய 1602/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2009. 09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*30.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46 ஏ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படு அச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 29 ஆம் திகதிய 1603 /44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*32.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*33.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*34.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

*35.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*36.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*37.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*38.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2006,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்பு களுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*39.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

40.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

பிலியந்தல தர்மசாஸ்த்ரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

45.

ஸம் நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0120 / ' 09

1.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மேல் மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக தேசிய தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பாளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்புநேரம் ஒதுக்கப் பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வள வென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0121 / ' 09

2.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மேல் மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக சுயாதீன தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பாளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்புநேரம் ஒதுக்கப் பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வள வென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0122 / ' 09

3.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமேல் மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக சுயாதீன தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பா ளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்புநேரம் ஒதுக்கப் பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வள வென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0124 / ' 09

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமேல் மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக தேசிய தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பாளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்புநேரம் ஒதுக்கப் பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வள வென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0130 / ' 09

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக தேசிய தொலைக் காட்சியில் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டனவென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் அந்தந்தக் கட்சியின் பெயர் மற்றும் கட்சிக்காக எந்த நிறுவனத்தைச் சேர்ந்த எவரால் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக எக்கட்சிகளிலிருந்து எந்தெந்த வேட்பாளர்கள் விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனரென்பதையும்,

(ii) அவ்வாறு கோரி இருந்த அனைவருக்கும் ஒளிபரப்புநேரம் ஒதுக்கப் பட்டிருந்ததாவென்பதையும்,

(iii) அது எந்த அடிப்படையில் என்பதையும்,

(iv) பணம் செலுத்தி அல்லது பணம் செலுத்த உடன்படிக்கை செய்து விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்த வேட்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்திய பணம், செலுத்தவேண்டிய பணம் எவ்வள வென்பதையும்,

(v) இத்தேர்தலுடன் தொடர்புடையதாக உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் பணம் செலுத்துவதை தவறவிட்டுள்ள ஆட்கள், கட்சிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(vi) அந்நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0420 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாஉல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0421 / '09

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லக்கல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0422 / '09

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வில்கமுவ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0423 / '09

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பன்கங்க பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0424 / '09

10.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யடவத்த பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0425 / '09

11.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உக்குவெல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0426 / '09

12.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரத்தொட்ட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0427 / '09

13.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0428 / '09

14.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இம்மாநகர சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இம்மாநகர சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0429 / '09

15.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலேவெல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0430 / '09

16.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புல்ல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர் மற்றும் தூரம் எவ்வளவென் பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி வீதிகளில் கொங்கிறீட் இடப்பட்டோ தார் போடப்பட்டோ இருந்த தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) 2006 ஆம் ஆண்டில் இப்பிரதேச சபை நியமிக்கப்பட்ட பின்னர் 2008 திசெம்பர் வரை கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்,

(v) அவற்றின் தூர அளவு எவ்வளவென்பதையும்,

(vi) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(vii) இப்பணம் எந்த செலவுத்தலைப்பில் இருந்து செலவிடப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?